**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.19/2022** |
| Sessions : | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | Prosecution : | **P.W. 3** |
| | Defence : | **D.W.** |
| | Court : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | சின்னதுரை | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **08.08.2025**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் கரும்பியத்தில் குடியிருக்கிறேன். டிரைவராக இருக்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். வழக்கில் இறந்துபோன கருப்பையாவை தெரியும். அவர் எனக்கு மாமா வேண்டும். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் இரவு சுமார் 12 மணியளவில் அ.சா.1 வந்து என்வீட்டு கதவை தட்டினார். என்ன மாமா என்று கேட்டேன். அவர் உடம்பெல்லாம் குத்து பட்டு இருந்தது. என்னவென்று கேட்டபோது தினேஷ் குத்திவிட்டான் என்று சொன்னார். பெரியமாமாவையும் குத்திவிட்டதாக சொன்னார். அ.சா.1 ன் மகன்களை நான் அழைத்து வந்தேன். கருப்பையா எங்கு விழுந்துகிடக்கிறார் என்று தெரியவில்லை என்று சொன்னேன். வாங்கள் போய் தேடலாம் என்று நான் அழைத்து சென்றேன். காட்டில் அவர் மண்டி போட்ட நிலையில் இருந்தார். தண்ணி தெளித்து பார்த்தபோது எந்தவொரு உணர்ச்சியும் இல்லை. உடனே பழனிசாமியை ஆம்புலன்ஸில் அழைத்து கொண்டு அரியலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். கருப்பையாவை ரோட்டிற்கு அவர் பையனும், நானும்

தூக்கிவந்தோம். ஆம்புலன்ஸ் காரர்களுக்கு போன் செய்து சொன்னதில் அவர்கள் வந்து பார்த்துவிட்டு இறந்துவிட்டதாக சொன்னார். பின்னர் பழனிசாமியை அங்கு சிகிச்சை அளிக்க முடியாது என்றும், பெரம்பலூர் கொண்டு போக சொன்னார்கள். பழனிசாமியின் மகள் புகார் கொடுத்தார். போலிசார் அன்று என்னை விசாரித்தார்கள். கருப்பையாவின் உடலை போஸ்ட்மார்டம் செய்து கொடுத்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கும், என்னுடைய வீட்டிற்கும் இடையே சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும். கருப்பையாவை ஆம்புலன்ஸில் அழைத்து செல்லவில்லை. நான் தேடிசெல்லும்போது அந்த இடத்தை சுற்றி லைட் எதுவும் கிடையாது. என்னுடன் பழனிசாமியின் மகன் வந்தார். இறந்துபோன கருப்பையாவின் போன் வெளிச்சத்தின் மூலம் அவர் அங்கு இறந்து கிடந்ததை நாங்கள் கண்டுபிடித்தோம். அங்கு ஓடையில் முழுவதும் சேறு இருந்தது. கருப்பையாவின் உடைகளில் சேறு இருந்தது. நான் கருப்பையா இருந்த இடத்தில் இருந்து போன் மூலமாக காவல்துறைக்கு தகவல் சொல்ல முயற்சிக்கவில்லை. நான் சென்று போலிசாரிடம் புகார் கொடுக்கவில்லை. எந்த இடத்தில் கருப்பையாவின் உடல் கிடந்தது என்று போலிசாரிடம் சொல்லவில்லை. கருப்பையா கிடந்த இடத்திற்கு நான் போனபின்னர் அதன்பிறகு சுமார் 1/2 நேரம் கழித்து பழனிசாமியை ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்றோம். ஆஸ்பத்திரியில் எப்படி காயம் ஏற்பட்டது என்று டாக்டர் அவரிடம் கேட்டார். எனக்கு வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றும், இறந்துபோனவர் பெரியமாமா என்பதாலும், அ.சா.1 சிறிய மாமா என்பதாலும், அவர் சொல்லிகொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.